**பாடம் 6** **ஜனவரி 31-பெப்ரவரி 6**



# கிறிஸ்துவில்மட்டுமே நம்பிக்கை

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** பிலி 3:1–16; ரோமர் 2:25–29; யோவான் 9:1–39; எபே 1:4,10; 1கொரி 9:24–27.

**மனன வசனம்:** இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப் பானமரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்துஉயிரோடெழுந்திருப்ப தற்குத் தகுதியாகும்படிக்கும். பிலிப்பியர் 3:10,11.

நாம் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்லாமல் விசுவாசத்தால் இரட்சிக்கப்படுகிறோம் என்பது நமக்கு குழப்பமாக இருக்கலாம். நம் இரட்சிப் புக்கு நம் கிரியைகள் உதவமுடிவதுபோல நினைத்து, அவற்றைச் சார்ந்திருக்கி றோம். இரட்சிப்புக்கு விருத்தசேதனம் அவசியமெனச் சொன்னவர்களைக் கண் டித்து பவுல் எழுதுகிறார்.

விருத்தசேதனம் போன்ற கிரியைகள் இரட்சிப்புக்கு உதவுவதாக யாரும் எண்ணாதபடிக்கு, நீதியானது நியாயப்பிரமாணத்தினால் அல்ல விசுவாசத்தால் ஈவாகக்கிடைப்பதாக பவுல் தெளிவுப்படுத்துகிறார். இன்று விருத்தசேதன சடங்கு இல்லையென்றாலும், அதுசுட்டிக்காட்கிற நியதி காணப்படுகிறது.

புரொட்டஸ்டன்ட் சீர்திருத்தமும்கூட கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களில் விசுவாசமும் கிரியைகளும் ஆற்றுகிற பங்கை அடிப்படையாக வைத்தே உரு வானது. எனவே கிறிஸ்துவே நமக்கு எல்லாமுமாக, ‘விசுவாசத்தைத் துவக்குகிற வரும் முடிக்கிறவருமாக’ இருக்கிறார். எபி 12:2. நம் முன்னுரிமைகள் சரியாக இருந்தால்,தேவ அன்பின் நிச்சயத்துடன் வாழ்வோம்; ‘மாம்சத்தின்மேல் நம் பிக்கையாயிராமல்’ இரட்சிப்பின் வாக்குறுதியில் களிகூருவோம்.

*2026, பெப்ரவரி 7 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்

**பிலி 3:1–3இல் பவுல் சொல்கிற நேர்மறையான விஷயங்கள் என்ன? எதிர்மறையான விஷயங்கள் என்ன? அவை எவ்வாறு தொடர்புபடுகின்றன? விசுவாசிகளை எவ்வாறு விவரிக்கிறார்?**

---

பவுல் தன் நிருபத்தை நேர்மறையாகத் துவங்குகிறார். அந்த நிருபத்தின் முக்கியமான ஒரு கருத்தைக் குறிப்பிடுகிறார். அது கர்த்தரில் சந்தோஷமாயிருப்பது. கர்த்தரில் சந்தோஷமாயிருக்க பல காரணங்களைக் கொடுக்கிறார். முக்கியமாக, நாம் நம்மீது அல்ல, கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்தால் சந்தோஷமாக இருக்கலாம்: நாம் 'மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிறோம்.' பிலி 3:3. மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கக்கூடாது என்பதை கடினமான விதத்தில் கற்றுக்கொள்ளாதவர் நம்மில் யாராவது இருக்கமுடியுமா?

'எச்சரிக்கையாயிருங்கள்' என்று மூன்று முறை வருகிறது; வேதாகமத்தில் வேறு எங்கும் இப்படிச் சொல்லப்படவில்லை. எந்த அச்சுறுத்தலை பவுல் குறிப்பிடுகிறாரென பிலிப்பிய விசுவாசிகள் நன்றாக அறிந்திருந்தார்கள். இவை தனித்தனிப் பிரச்சினைகள் அல்ல; மூன்றுமே கள்ளப்போதகக் கூட்டத்தாரால் வந்தவை.

இஸ்ரவேலில் துன்மார்க்கர் அல்லது பக்தியற்றவர்களை 'நாய்கள்' என்று அழைக்கிற வழக்கம் இருந்தது. பிலி 3:2; சங் 22:16; ஏசா 56:10; மத் 7:6; 2 பேதுரு 2:21,22. கள்ளப்போதகர்களுக்கு 'பொல்லாத வேலையாட்கள்' என்கிற பெயரும் பொருந்தும். அவர்கள் 'சுன்னத்துக்காரார்' அல்லது 'உறுப்பு சிதைப்போர்' (பிலி 3:2, பொதுமொழிபெயர்ப்பு) என்று குறிப்பிடப்படுவதால், புறஜாதியாரான விசுவாசிளை விருத்தசேதனம் பண்ணவைக்க கலாத்தியாவிலும் அவர்கள் முயன்றுவந்தது தெரிகிறது; இது அப்போஸ்தலரின் ஆலோசனை சங்கத்திற்கு எதிராக இருந்தது. அப் 15.

பொய்ப்போதனைகளைப் பரப்புவது போன்ற ஆவிக்குரிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒரு வழி, 'கர்த்தருக்குள் சந்தோஷப்படுவதாகும்.' பிலி 3:1; 4:4.

மகிழ்ச்சியான விஷயங்கள் சந்தோஷத்தைக் கொடுக்கும். நாம் சந்தோஷமாக இருப்பதை தேவன் விரும்புகிறார்; மெய்யான மகிழ்ச்சிக்கும் நீடித்த சந்தோஷத்திற்கும் வழிகாட்டியாக அவரது வார்த்தை உள்ளது. இதில் தேவனுடைய இரக்கமும், இரட்சிப்பின் ஆசீர்வாதங்களும், ஓய்வுநாளையும் சேர்த்து தேவனுடைய பிரமாணத்தை நம் வாழ்க்கையின் வழிகாட்டியாக்குவதும், அவரது வார்த்தையை விசுவாசிப்பதும், பிள்ளைகளை பக்தியுள்ளவர்களாக வளர்ப்பதும் அடங்கும். சங் 9:14, ஏசா 58:13,14, சங் 119:162, 5:11, நீதி 23:24,25.

---

**தற்சமயம் நம் வாழ்க்கையில் எல்லாமே நன்றாகச் சென்றாலும்கூட, வாழ்க்கை மிகக்கடினமாக மாறலாம். இப்போது நன்றாகச் செல்லாவிட்டாலும், சந்தோஷமாக இருப்பதற்கு என்னென்ன செய்யலாம், செய்யவேண்டும்? அவ்வாறு செய்யவிடாமல் உங்களைத் தடுப்பது என்ன?**

# பவுலின் ‘கடந்தகால வாழ்க்கை’

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதற்குமுன், ஏற்றுக்கொண்டதற்குப்பின் என்று தங்கள் வாழ்க்கையை விசுவாசிகள் பெரும்பாலும் பிரித்துப் பார்க்கிறார்கள். பிலி 3இலும் அதைக் காணலாம். கிறிஸ்தவர்கள் அல்லாத சிலரை, சிலசமயங்களில் உலகத்தரத்தின்படி ‘நல்ல மனிதர்கள்’ என்று சொல்கிறோம்; அது சரியாகவும் இருக்கலாம். ஆனால் தேவனுடைய தரத்தின்படி எவருமே, ஏன் கிறிஸ்தவர்கள்கூட நல்லவர்கள் இல்லை.

**தன் வாழ்க்கையில் முன்பு தான் பெருமையெனக் கருதின பல விஷயங்களை பவுல் சுட்டிக்காட்டுகிறார். பிலி 3:4-6. அவை என்ன? உங்களது கடந்தகால, நிகழ்கால வாழ்க்கையின் ‘நல்ல விஷயங்கள்’பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

---

---

பொய்ப்போதனையைப் பரப்பிவந்த விசுவாசிகளான யூதர்களையும், விருத்தசேதனம் போன்ற மனித கிரியைகளை நம்பாமல், தங்கள் இரட்சிப்புக்காக முற்றிலும் கிறிஸ்துவையே சார்ந்திருந்த விருத்தசேதனம் பண்ணப்படாத புறஜாதியாரையும் பவுல் வேறுபடுத்திக் காட்டுகிறார். எபி 6:1; 9:14; ரோமர் 2:25-29. பவுலின் கடந்தகால வாழ்க்கையும், குடும்ப வரலாறும் சகயூதர்களுக்கு பெருமையாக இருந்திருக்கலாம்; ஆனால் அவற்றில் எதுவும் அவரது இரட்சிப்பிற்குப் பங்களிக்கவில்லை. உண்மையில் இரட்சிப்பிற்குத் தடையாக இருந்தன; ஏனென்றால், கிறிஸ்து அவசியம் என்பதை அறியாதபடி அவரைக் குருடாக்கியிருந்தன.

பவுல் ‘எட்டாம் நாளில்’ விருத்தசேதனம் பண்ணப்பட்டவர். அதாவது, பிறப்பால் ஒரு இஸ்ரவேலர். உடன்படிக்கை மக்களுக்கு சொந்தக்காரர். மேலும், பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பென்யமீனரின் பகுதியில்தான் இஸ்ரவேலின் மிகமுக்கிய நகரங்கள் சில அமைந்திருந்தன. பவுல் மூப்பராகிய கமாலியேலின் மாணவர். அப் 22:3; 26:4,5. அதனால் எபிரெய மொழியை நன்றாக அறிந்திருந்தார். மேலும் ஒரு பரிசேயர்; நியாயப்பிரமாணத்தையும், மரபுப்படி அதைக் கடைப்பிடிக்கவேண்டிய விதத்தையும் அறிந்திருந்தார்.

நியாயப்பிரமாண வைராக்கியத்தால் சபையை உபத்திரவப்படுத்தினார்; ஏனென்றால் நியாயப்பிரமாணம் சொல்வதுபோன்ற யூத வாழ்க்கை முறைக்கு சபை அச்சுறுத்தலாக இருப்பதாக நினைத்தார். மனித கண்ணோட்டத்திலான ‘நீதி’ சம்பந்தப்பட்ட விஷயங்களில் ‘குற்றமற்றவராக’ இருந்தாலும், தான் நினைப்பதைவிட நியாயப்பிரமாணம் அதிகமாக கோருவதையும், கிறிஸ்து இல்லாமல் அதற்குமுன் தான் குற்றவாளியாகவே நிற்கவேண்டியதையும் உணர்ந்தார்.

---

**நியாயப்பிரமாணம்பற்றி இயேசுவும் பவுலும் குறிப்பிடுவது என்ன? நியாயப்பிரமாணமல்ல, ‘கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசமே’ எவ்வாறு நீதியின் ஒரே ஆதாரமாக இருக்கிறது? ரோமர் 7:7-12; மத் 5:21,22,27,28; பிலி 3:9. நியாயப்பிரமாணத்தை இயேசு சொல்கிறபடி எவ்வளவு தூரம் கைக்கொள்கிறீர்கள்?**

# அர்த்தமிக்க விஷயங்கள்

முன்பு பவுல் பெருமையாகக் கருதின விஷயங்கள் உண்மையில் அவரது விசுவாசத்திற்கு தடையாக இருந்ததாகப் பார்த்தோம்; ஏனென்றால் கிறிஸ்துவைக் காணாதபடி அவரைக் குருடாக்கின. விசுவாசத்திற்குமுன் தன் ஆவிக்குரிய பதிவேடு எப்படி இருந்தது என்பதை விவரிப்பதற்கு லாபம், நஷ்டம் என்று வணிக சம்பந்தமான வார்த்தைகளை பவுல் பயன்படுத்துகிறார். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு 'ஆவிக்குரிய பதிவேடு' இருக்கிறது. மனமாற்றத்திற்கு முன்பு, பவுலின் பதிவு அக்கால யூத விழுமியங்களின்படி அளவிடப்பட்டதே தவிர, இயேசு போதித்த வேதாகம விழுமியங்களின்படி அளவிடப்படவில்லை.

மனமாற்றத்திற்கு பிறகு, விழுமியங்களின் அளவுகோல் முற்றிலும் மாறியது; யூதமார்க்க 'நாணயத்தால்' அல்ல, 'பரலோக நாணயத்தால்' அளவிடப்பட்டதால், அவரது ஆவிக்குரிய பதிவேடு வித்தியாசமாகக் காட்சியளித்தது.

'பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவரே பரலோகம்பற்றிப் பேசமுடியும். பரலோக நாணயத்தை உருவாக்குகிற விஷயங்களை சரியாக அறிவிக்கமுடியும். அதின்மீது தம் சாயலையும் அடையாளத்தையும் தெளிவாகக் குறித்திருக்கிறார். சீர்கேட்டிலிருந்து எவர்களைத் தூக்கி, தம் சிங்காசனத்திற்கு அருகிலுள்ள இடத்திற்கு உயர்த்த வந்தாரோ அவர்கள் இருக்கிற ஆபத்தான நிலையை அறிகிறார். பயனற்றதும், ஆபத்தானதுமான விஷயங்களில் சிற்றின்ப நாட்டம் வைப்பதில் ஆபத்து இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். பயனற்ற விஷயங்களில் நம் நேரத்தையும் தாலந்தையும் வாய்ப்பையும் நாம் வீணாக்காதபடிக்கு, பூலோக விஷயங்களிலிருந்து பரலோக விஷயங்களுக்கு அவர்களது சிந்தைகளைத் திருப்ப முயல்கிறார்.'

முதல் நூற்றாண்டு யூதமார்க்கத்தில் பவுலின் புகழ் அதிகமாகப் பரவி வந்தது. ஆனால், தமஸ்குவுக்குச் செல்கிற வழியில் மகிமைப்படுத்தப்பட்ட இயேசுவைப் பார்த்தபோது, கண்பார்வை போனது, அப்போது அவரது ஆவிக்குரிய பார்வை சீரானது; தெளிவாகக் காண ஆரம்பித்தார். அப் 9.

**குருடாகி, பின்னர் இயேசுவைத் தெளிவாகப் பார்த்த இன்னொரு மனிதனைப்பற்றி யோவான் 9 சொல்கிறது. 'காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும்' தாம் உலகத்திற்கு வந்ததாக இயேசு சொன்னார். யோவான் 9:39. இந்த நியதியை உங்களுடைய வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்தலாம்?**

பரலோகத்திலும் புதிய பூமியிலும் நமக்குள்ள நித்திய வாழ்வைவிட அதிக மதிப்புமிக்கது ஏதாவது உண்டா? ஆனாலும் உலக விழுமியங்கள் இந்த உண்மையைக் காணாதபடி குருடாக்குகின்றன. இவ்வுலகம் மதிக்கிற விஷயங்களுக்கும் பரலோகம் மதிக்கிற விஷயங்களுக்கும் இடையே உள்ளத்தில் ஒரு போராட்டம் நடக்கிறது. மத் 13:22; லூக் 4:5, 6; 1யோவான் 2:16. கிறிஸ்துவுக்கு ஒப்பாக மாறுவதையும், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதையும் பரலோகம் பெரிதாகப் போற்றுகிறது.

---

**ஆவிக்குரிய சத்தியங்களையும் முக்கிய விஷயங்களையும் காணாதபடி உலகம் நம்மைக் குருடாக்கலாம். முக்கியமான விஷயங்களில் நாம் கவனம் செலுத்துவதற்கு முக்கிய வழி என்ன?**

# கிறிஸ்துவின் விசுவாசம்

தமஸ்குவுக்குச் செல்கிற வழியில் பவுலுக்கு அற்புதமான ஒரு மாற்றம் உண்டாது; நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்ட அவரது பழைய வாழ்க்கை போய், கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் கண்டார். 'நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும்,'' கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்' என்கிறார். பிலி 3:8,9.

**'கிறிஸ்துவுக்குள்' காணப்படும்படி என்று பவுல் சொல்கிறார். எபே 1:4; 2கொரி 5:21; கொலோ 2:9; கலா 2:20. பவுல் இவ்வாறு சொல்வதின் அர்த்தம் என்ன?**

---

---

கிறிஸ்துவுக்குள் இருப்பதாக பவுல் சொல்வதுகுறித்து பல விவாதங்கள் உள்ளன. ஆனால் மிகச்சிறந்த விளக்கத்தை பவுலே கொடுக்கிறார்: 'காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டும்.' எபே 1:9. அதுதான் துவக்கம்முதலே தேவனுடைய நோக்கம். அது நிகழ்கிற விதத்தை பவுல் தெளிவுப்படுத்துகிறார்: 'நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.' 1கொரி 1:30.

'கிறிஸ்துவுக்குள்' என்பதில் நாம் ஆவிக்குரிய அறிவடைவதும் (ஞானம்), விசுவாசத்தால் நீதிமானாவதும் (நீதி), பரலோகத்திற்கு ஆயத்தமாவதும் (பரிசுத்தம்), இரண்டாம் வருகையில் மகிமையடைவதும் (மீட்பு), இரட்சிப்பின் திட்டத்தின் அனைத்தும் அடங்கும். ஆரம்பம்முதல் முடிவுவரை கிறிஸ்து நமக்காகவும் நமக்குள்ளும் செய்கிற கிரியைதான் இரட்சிப்பு. எனவே, கிறிஸ்துவை ஆதாயப்படுத்துவதால், நமக்குத் தேவையான அனைத்தையும் பெறுகிறோம்.

**பவுல் வேறுபடுத்திக் காட்டுகிற இரண்டு விஷயங்கள் என்ன? இந்த வித்தியாசத்தை எப்போதும் நினைவில் வைத்திருப்பது ஏன் முக்கியம்? பிலி 3:9.**

---

---

---

ஒருவரின் 'சொந்த நீதி' உண்மையில் நீதியாகாது. ஏனெனில் நியாயப்பிரமாணத்தால் ஜீவனைக் கொடுக்கமுடியாது; கிறிஸ்துமட்டுமே விசுவாசத்தின் மூலம் கொடுக்கமுடியும்; இதை பவுல் உணர்ந்தார். கலா 3:21,22. பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. யாக் 2:19. இரட்சிக்கிற ஒரே விசுவாசம் 'கிறிஸ்துவின் விசுவாசம்' மட்டுமே. அவரது விசுவாசம்மட்டுமே முற்றிலும் கீழ்ப்படிந்தது; கீழ்ப்படிமுடியும். விசுவாசம் என்பதற்கான கிரேக்க வார்த்தை பிஸ்டிஸ். அதற்கு உண்மைதன்மை என்றும் அர்த்தம். எனவே நாம் கிறிஸ்துவுக்குள் இருந்து, அவர் நமக்குள் ஜீவித்தால், நாம் அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவரது விசுவாசத்தினால் வாழ்கிறோம்.

# கிறிஸ்துவை அறிவதையே நாடுதல்

**பிலி 3:10-16 வசனங்களில் பவுல் சொல்கிற சில முக்கியக் கருத்துகள் என்ன?**

கிறிஸ்துவை அறிவதைவிட முக்கியமானது எதுவுமில்லை; இறுதியில் நான் இவர்களை அறிவேன் என்று பிதாவுக்குமுன் அவர் நம்மை அங்கீகரிப்பதற்கும் அதுவே அச்சாரமாயிருக்கிறது. மத் 7:21-23; 10:32,33. அவரை எவ்வாறு அறிகிறோம்? எழுதப்பட்ட அவரது வார்த்தையை வாசித்து, அதன்படி வாழ்வதன் மூலமாக. சீடர்களைப்போல அவரை முகமுகமாகப் பார்த்து அறியமுடியாது. அவ்வாறு அறிந்திருந்த அவர்களும்கூட அவரது வார்த்தைகளைப் புரிந்துகொள்ளவில்லை; பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்த வேண்டியது அவசியம் என்பதை அது காட்டுகிறது. யோவான் 16:13. அவரை எவ்வளவு அதிகமாக அறிகிறோமோ, அவ்வளவுக்கு அவரை நெருங்கிச் செல்வோம்; ஏனென்றால் 'அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை' அனுபவிக்கிறோம்; அது நம்மை 'புதிதான ஜீவனுள்ளவர்களாய்' எழும்பச் செய்கிறது. பிலி 3:10; ரோமர் 6:4.

நாம் இயேசுவின் 'பாடுகளின் ஐக்கியத்தில்' பங்கெடுப்பதாலும் அவரை நெருங்கிச் செல்கிறோம். பிலி 3:10. நாம் எதிர்கொள்கிற ஒவ்வொரு சோதனையும், ஒவ்வொரு வேதனையான அனுபவமும் நமக்காக இயேசு அனுபவித்தவற்றை அறியவும், அவரது சித்தத்தை தெளிவாகப் புரியவும் உதவுகின்றன.

அவரிடம் நெருங்குவதற்கான மூன்றாவது வழி 'இலக்கை நோக்கி' தொடருவதாகும். பிலி 3:14. அந்த இலக்கு என்ன? ஸ்கோபோஸ் என்கிற இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்குமட்டுமே வருகிறது. ஒருவர் ஒரு பந்தயத்தின் இலக்கை எட்டி, அதற்கான பரிசைப் பெறுவதை அது சுட்டிக்காட்டுகிறது. பவுல் அதை 'தேவன் கொடுக்கப்போகிற பரிசை வெல்லுவது' என்கிறார். பிலி 3:14. சமகால மொழிபெயர்ப்பு. கிறிஸ்து தமது மரணத்தாலும், உயிர்த்தெழுதலாலும் பரலோகத்திற்குச் சென்றதுபோல, அதே பரலோகப் பரிசை, அதாவது நித்திய ஜீவனை நாமும் பெறும்படிக்கு அழைக்கிறார்.

அதை நாம் இன்னும் பெற்றிருக்கவில்லை. 'நம்முடைய அற்பமான சரீரம்' அவருடைய 'மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபமாகிற' வரையிலும், நாம் முழுதளவு பூரணத்தை அடைவதில்லை. பிலி 3:21. அவரை அறிவதாலும், அவரது பிரசன்னம் அனுதினமும் நம்மில் காணப்பட ஜெபிப்பதாலும், இயேசுவைப்போல இருப்பதற்கான இலக்கைநோக்கி ஒவ்வொரு வழியிலும் தொடருகிறோம். அது 'ஒன்றே' பவுலின் இலக்காக இருந்தது. பந்தயத்தில் ஓடுவதால், நாம் எங்கு இருக்கிறோம் அல்லது நம்முடன் யாரெல்லாம் ஓடுகிறார்கள் என்பதில் கவனம் சிதறக்கூடாது. 1கொரி 9:24-27. நமக்குமுன் இருக்கிற இலக்கில் மட்டுமே நம் ஒரே நோக்கம் இருக்கவேண்டும், அது நமக்காகக் காத்திருக்கிற பரலோகப் பரிசு. பந்தயத்தில் ஓடுகிறவர் தன் ஒவ்வொரு தசையையும் முறுக்கேற்றி, தொடுகோட்டைத் தொடும்படி ஓடுவதுபோல, அந்த இலக்குதான் நம் ஒரே நோக்கமாக இருக்கவேண்டும் என்கிறார்.

---

**கர்த்தருடன் நடக்கும்போது, பின்னிட்டுத் திரும்பாமல், நம் பாவங்களையும் தோல்விகளையும் பார்க்காமல், கிறிஸ்துவுக்குள் இப்போது நமக்கு வாக்களிக்கப்பட்டிருப்பதை மட்டுமே நோக்கிப் பார்க்கவேண்டியது ஏன் முக்கியம்?**

# மேலும் படிக்க:

'சீரும் சிறப்புமான குணத்தை வளர்க்க விரும்புகிறவன், சமநிலை கிறிஸ்தவனாகக் காணப்பட விரும்புகிறவன் கிறிஸ்துவுக்கு அனைத்தையும் கொடுக்கவேண்டும், கிறிஸ்துவுக்காக அனைத்தையும் செய்யவேண்டும்; அரைகுறை மனதுடனான சேவையை மீட்பர் ஏற்றுக்கொள்ள மாட்டார். சுய அர்ப்பணிப்பின் அர்த்தத்தை தினமும் அவன் கற்றுக்கொள்ள வேண்டும். தேவ வார்த்தையை ஆராய்ந்து, அதன் அர்த்தத்தைக் கற்று, அதன் போதனைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும். அவ்வாறு கிறிஸ்தவத்தின் மகத்தான நிலையை அவன் எட்டமுடியும். தினமும் தேவன் அவனிடம் கிரியைசெய்கிறார், இறுதிச் சோதனையின் காலத்தில் நிலைநிற்கும்படி குணத்தைப் பூரணப்படுத்துகிறார். அந்த விசுவாசி ஒவ்வொரு நாளும் மனிதர்களுக்கும் தேவதூதர்களுக்கும் முன்பாக வேடிக்கைப் பொருளாக வைக்கப்பட்டு, விழுந்துபோன மனிதர்களுக்கு சுவிசேஷம் என்ன செய்யமுடியும் என்பதைக் காட்டுகிறான்.'[1]

மணவாளனுடைய வருகைக்காகக் காத்திருக்கிறவர்கள் பிற மக்களிடம், 'இதோ உங்கள் தேவன்' என்று சொல்லவேண்டும். உலகத்திற்குக் கொடுக்கவேண்டிய இரக்கத்தின் கடைசிச் செய்தி, அதன் கடைசி ஒளிக்கதிர்கள், அவரது அன்பாகிய குணத்தின் வெளிப்பாடாக இருக்கிறது. தேவ பிள்ளைகள் அவரது மகிமையை வெளிப்படுத்த வேண்டும். தங்களுடைய வாழ்க்கையிலும் குணத்திலும் தேவ கிருபை தங்களுக்காகச் செய்ததை வெளிப்படுத்தவேண்டும்.

'நீதியின் சூரியனுடைய ஒளி நற்கிரியைகளில் அதாவது, சத்திய வார்த்தைகளிலும் பிரிசுத்த செய்கைகளிலும் பிரகாசிக்கவேண்டும்'.[2]

[1] Ellen G. White, The Acts of the Apostles, p. 483.

[2] Ellen G. White, Christ's Object Lessons, pp. 415, 416.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *கர்த்தருக்குள் சந்தோஷமாக இருப்பதுபற்றி தியானியுங்கள். நம் பாடுகளில் நாம் மகிழவேண்டும் என்பது வேதாகம கருத்தாக இருந்தாலும், அதில் நாம் சந்தோஷமாக இருக்கும்படி சொல்லாமல், கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்கும்படி சொல்லப்படுகிறது. கர்த்தரையும் அவரது தயவையும் வல்லமையையும் அன்பையும் இரட்சிப்பையும் எப்போதும் நமக்குமுன் வைத்திருப்பது ஏன் முக்கியம்? அவ்வாறு செய்வது வாழ்க்கையின் சோதனைகளின் மத்தியில் எவ்வாறு அதிக நன்மையை உண்டாக்கும்?*

2. *கிறிஸ்தவர்களில் 'நற்கிரியைகளை' உருவாக்குவதில் கிருபையின் பங்குபற்றி மேலுள்ள மேற்கோள்கள் என்ன சொல்கின்றன? இந்தக் கிருபை நம்மில் செயல்படவேண்டியது, கிறிஸ்துவின் சீக்கிர வருகையை எதிர்பார்க்கிற நமக்கு எவ்வளவு முக்கியம்? நாம் நற்கிரியைகளால் இரட்சிக்கப்படாவிட்டாலும்கூட, நற்கிரியைகள் இல்லாவிட்டால் நாம் இரட்சிக்கப்பட்டதாக அர்த்தமா?*

3. *மாம்சத்தில் நம்பிக்கை வைக்கவேண்டாம் என்பதின் அர்த்தம் என்ன? நாம் ஏன் அதில் நம்பிக்கை வைக்கக்கூடாது? நம் மாம்சமானது தேவன் தந்த ஓர் ஈவு அல்லவா?*

# எதிர்பாராமல் சபைக்குச் செல்தல்

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் எழுந்ததுமே ஆலயத்திற்குச் செல்லவேண்டும் என்று கில்பர்ட் ஃபிமாகாவுக்கு அதிக ஆர்வமுண்டானது. 22 வயதான ஃபிமாகா, தன் அறைத்தோழகான தன் சகமருத்து ஊழியப்பணியாளரிடம் தன் ஆசையைப்பகிர்ந்துகொண்டார். சாம்பியாவின் கிராமப்புறப் பகுதி ஒன்றில் மூன்றுவார ஊழியப்பணிக்காக அவர்கள் வந்திருந்தார்கள்.

"இங்கு ஏதாவது ஆலயத்திற்குச் சென்றால் நன்றாக இருக்கும். அங்கு தேவ வார்த்தையைப் பகிர்ந்துகொள்ளலாம், ஏழாம் நாள் ஓய்வுநாள்பற்றிச் சொல்லலாம்" என்று கூறினார்.

பிறகு சிரித்தார். அவரது தோழரும் சிரித்தார். அது அர்த்தமற்ற பேச்சுபோலத் தோன்றியது. ஆனாலும் ஆலயத்திற்குச் செல்லவேண்டும் என்கிற ஆசை மனதிற்குள் இருந்தது. அதனால் சென்றார். அருகிலிருந்த ஒரு சபைக்குச் சென்றபோது, பதட்டமாக இருந்தது. அவர்களிடம் போய், 'இது ஆராதனை நாளல்ல' என்று சொல்லமுடியாது.

ஆனால் அங்கிருந்தவர்கள் சீக்கிரமே அவரிடம் நட்பாகப் பழகினார்கள். அவர் மருத்துவ ஊழியர் என்பதை அறிந்து, அவரை அன்பாக வரவேற்றார்கள். பிறகு, சபைத்தலைவர்களுடன் அவரை உட்காரச் செய்தார்கள்.

பிரசங்க நேரம் வந்தபோது, அவரைப் பிரசங்கம் பண்ணும்படி அழைத்தார்கள். தாழ்மையுடன் பிரசங்க மேடைக்குச் சென்றார், ஆனால் ஓய்வு நாள்பற்றிப் பேசுவதற்கு பயமாக இருந்தது. யோபு புத்தகத்திலிருந்து பேச ஆரம்பித்தார்.

அப்போது, 'ஓய்வுநாள்பற்றிப் பேசு' என்று ஒரு சத்தம் கேட்டது. ஆனால் அதை சட்டை செய்யாமல், தொடர்ந்து பிரசங்கித்தார். மீண்டும் அந்தச் சத்தம் கேட்டது.

மூன்றாவது முறை அந்தச் சத்தம் கேட்டபோது, கில்பர்ட் லேவி 23:3 க்கு வேதாகமத்தைத் திருப்பி, 'ஆறுநாளும் வேலைசெய்யவேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்யவேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக' என்று வாசித்தார். பிறகு மத் 28:1, ஆதி 2:1–3 வசனங்களையும் வாசித்தார்.

"ஏழாம் என்பது ஞாயிற்றுக்கிழமை அல்ல, சனிக்கிழமை, எனவே ஆராதனையின் நாள் ஞாயிறு அல்ல, சனிக்கிழமை" என்று சொன்னார்.

அவர் பிரசங்கம் செய்து முடித்ததும், சபைத்தலைவர் ஒருவர் எழுந்து, "நான் ஞாயிற்றுகிழமையில் ஆராதனை செய்வதை நிறுத்திவிட்டேன், சனிக்கிழமையில்மட்டுமே ஆராதனை செய்கிறேன்" என்று சொன்னார்.



ஆராதனை முடிந்து சென்றபோது, "நாம் தவறான நாளில் ஆராதனை செய்து கொண்டிருப்பது நமக்குத் தெரியாமல் போய்விட்டது" என்று ஒருவர் சொன்னார். "இனி சனிக்கிழமையில்தான் ஆராதனை செய்யவேண்டும்" என்று இன்னொருவர் சொன்னார். பிறகு சில நாட்களில் சபைத்தலைவர் ஞானஸ்நானம் பெற்று, செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையில் சேர்ந்தார். அந் தச் சபையின் அங்கத்தினர்கள் பலர் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாகி வருகிறார்கள்.